


# திராவிடத்தின் தவப்புதல்வன்... திறமைக்கோர் 'தமிழ்ப் புதல்வன்'!

## திராவிட மாடல் அரசு

82

**'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

'நீ உன் கடமையை அமைதியாகச் செய். அதனுடைய சத்தத்தை வெற்றி பார்த்துக் கொள்ளும்' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். ஆம்... காழ்ப் புணர்ச்சி ஊடகங்களும், அரசியல் பேதைகளும் நாளுக்கு நாள் கதறுகின்ற சத்தம் அதிகரித்துக் கொண்டே வருவது, நம் 'திராவிட மாடல் அரசு' கொண்டு வரும் திட்டங்கள் எல்லாம் பெரிய அளவில் வெற்றி பெற்று வருகின்றன என்பதையே காட்டுகிறது.

அந்தச் சத்தங்களுக்கு இன்னும் வலுச் சேர்க்கும் விதமாக, நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான **'திராவிட மாடல் அரசு'** கொண்டு வந்துள்ள இன்னொரு திட்டம்தான் **'தமிழ்ப்புதல்வன்'**..!

6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 உதவித்தொகை வழங்குவதுதான் 'தமிழ்ப் புதல்வன்' திட்டம். இந்தத் திட்டத்தை 2024 ஆகஸ்ட் 9 அன்று நமது முதலமைச்சர் அவர்கள் கோவை மாவட்டத்தில் தொடங்கி வைத்தார்கள். திட்டத்தைத் தொடங்கி வைக்கும் விதமாக மாணவர்களுக்குப் பற்று அட்டைகளை (டெபிட் கார்டு) வழங்கினார்கள். இந்தத் திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக 2.26 இலட்சம் மாணவர்கள் பயன்பெறுகின்றனர்.

### உயர்த்தும் உதவித் தொகை

2024-2025- ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், பெண்களின் சேர்க்கையை அதிகரிக்கும் நோக்கத்துடன் அறிமுகப்படுத்தப் பட்ட 'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப்பெண் திட்டம்', பெண்களின் உயர் கல்வியில் பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தி யுள்ளது. அதேபோல், அரசு பள்ளிகளில் பயின்ற, ஏழை எளிய மாணவர்களை சாதனை யாளர்களாக உருவாக்கிடவும், அரசுப் பள்ளி மாணவரின் உயர்கல்விச் சேர்க்கையை உயர்த்திடவும் **'தமிழ்ப் புதல்வன்'** எனும் ஒரு மாபெரும் திட்டம் வரும் நிதியாண்டில் இருந்து அறிமுகப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, இந்தத் திட்டத்தின் கீழ் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளி களில் பயின்று உயர்கல்வி சேரும் மாணவர்கள் தங்களுக்கான பாடப் புத்தகங்கள், பொது அறிவு நூல்கள் மற்றும் இதழ்கள் ஆகியவற்றை வாங்கி தங்களது கல்வியை மெருகேற்றிட உதவும் வகையில், மாதந்தோறும் 1,000 ரூபாய் அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும்.

பொதுவாகவே, கல்வி கற்பதில் மாணவர்களை விடவும் மாணவிகள் அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர். அதற்கு ஒவ்வோர் ஆண்டும் வெளியாகும் பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி விகிதங்களே சாட்சி. பள்ளி இடைநிற்றல் விகிதங்களில் மாணவர்களைக் காட்டிலும் மாணவியர்களின் எண்ணிக்கை முன்பு அதிகமாக இருந்தது. இப்போது 'திராவிட மாடல் அரசு' மேற்கொண்டு வரும் முயற்சிகளால் இடைநிற்றல் விகிதம் குறைந்து வருகிறது. போலவே, பள்ளிப் படிப்பு முடித்து கல்லூரியில் உயர்கல்வி சேருபவர்களின் விகிதத்தைப் பொறுத்தவரை மாணவர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் மாணவியர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. அதற்கு மிக முக்கியக் காரணம், 'புதுமைப்பெண்' திட்டம்தான்.

எனவே, பள்ளிப் படிப்போடு தங்கள் கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, பொருளாதாரச் சூழ்நிலைகளால் வேலைக்குச் செல்லும் மாணவர்களை கல்லூரிக்கு அனுப்பி, அவர்களுக்குச் சிறந்த வருங்காலத்தை உருவாக்கித் தர வேண்டும் என்ற நம் திராவிடத் தவப்புதல்வரின் சீரிய எண்ணத்தின் விளைவே 'தமிழ்ப்புதல்வன்'. இந்தத் திட்டத்தில் சுமார் 3 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில், தமிழ்நாடு அரசால் 2024-2025- ஆம் நிதியாண்டுக்கு 360 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### எப்படி விண்ணப்பிப்பது?

- 'தமிழ்ப்புதல்வன்' திட்டத்தில் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று, இந்திய அரசு / தமிழ்நாடு அரசு / பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்து உயர்கல்வி பயிலும் மாணவர்கள், இந்த உதவித் தொகைக்குத் தகுதியானவர்கள் ஆவர்.
- இந்தத் திட்டத்தில் சேர்ந்து மாணவர்கள் பயன்பெற்றிட, இணையதள வாயிலாக விண்ணப்பிக்க பிரத்யேகமான தகவல் முகமை (Portal) வடிவமைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பிக்கும் மாணவருக்குத் தனிப்பட்ட எண் (Unique id) உருவாக்கப்பட்டு, மாணவரால் பதிவு செய்யப்பட்ட அலைபேசிக்குக் குறுஞ்செய்தி அனுப்பப்படும். அந்த எண்ணைக் கொண்டு, விண்ணப்பங்களின் நிலையினை அறிந்துகொள்ள இயலும்.
- மாணவர்களின் ஆதார் எண், பள்ளிக் கல்வித் துறையின் கல்வி மேலாண்மைத் தகவல் அமைப்பு (Emis) தரவுகள் மற்றும் உயர்கல்வி பயிலும் நிறுவனத்தில் பெற்ற சேர்க்கை மற்றும் பல்கலைக்கழக மேலாண்மைத் தகவல் அமைப்பு (Umis) ஆகிய தரவுகளுடன் மாணவர்களின் விண்ணப்பம் ஒற்றைச் சாளர முறையில் சரிபார்க்கப்படும்.
- அங்கீகரிக்கப்பட்ட அனைத்து விண்ணப் பங்களுக்கும் சமூக நலத்துறையால் 'நேஷனல் ஆட்டோமேட்டட் க்ளியரிங் ஹவுஸ்' (National Automated Clearing House வாயிலாக ரூ.1,000/- உதவித் தொகை மாணவர்களின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக வரவு வைக்கப்படும். மாணவர்கள் விண்ணப்பம் பதிவு செய்யும் போதும், ஊக்கத் தொகை மாணவர்களின் வங்கிக் கணக்குக்குப் பரிமாற்றம் செய்த பின்னரும், அவர்களின் பதிவு செய்யப்பட்ட அலைபேசி எண்ணுக்குக் குறுஞ்செய்தி அனுப்பப்படும்.
- இந்தத் திட்டத்தில் கலை மற்றும் அறிவியல், தொழிற்சார் படிப்புகள், இணை மருத்துவம் சார்ந்த படிப்புகள், பட்டயப் படிப்பு, தொழிற்கல்வி மற்றும் ஒருங்கிணைந்த பட்ட மேற்படிப்பு (முதல் 3 ஆண்டுகளுக்கு மட்டும்) போன்ற உயர்கல்விப் படிப்புகள் படிக்கும் மாணவர்கள் பயன்பெறலாம்.
- அதேபோன்று பிற மாநிலங்களில் ஒன்றிய அரசின் கீழ் செயல்படும் Iit, Nit, Iiser போன்ற தகைசால் கல்வி நிறுவனங்களில் பயிலும் அரசுப் பள்ளிகளில் பயின்ற மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழிக் கல்வியில் பயின்ற மாணவர்களும் இந்தத் திட்டத்தில் பயன்பெறலாம்.

'ஒரு மனிதனுக்கு ஒருவேளை உதவ உணவைக் கொடு. அவனுக்கு வாழ்க்கை முழுவதும் உதவ, சிறந்த கல்வியைக் கொடு' என்பது ஒரு சீனப்பழமொழி. தமிழ்நாட்டில் உணவும் கொடுத்து, சிறந்த கல்வியையும் மாணவச் சமுதாயத்துக்குக் கொடுக்கிறது 'திராவிட மாடல் அரசு'. அதன் பலன், இன்னும் சில ஆண்டுகளில் தெரிய வரும்போது, தமிழ்நாடு உலகப் பொருளாதாரத்தில் உயர்ந்து நிற்கும்..!

**...சாதனை தொடரும்**

நம் 'திராவிட மாடல் அரசு' எந்த ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தாலும், அதைக் கொச்சைப்படுத்திப் பேசுவது அரசியல் அநாகரிகர்களின் வழக்கம். 'தமிழ்ப்புதல்வன்' திட்டத்தையும் அப்படிக் கொச்சைப்படுத்த, பள்ளிப் பாடப் புத்தகங்களின் விலை உயர்வை இழுத்து வந்தார்கள்.

இந்தப் புத்தகங்களை விலை கொடுத்து வாங்குபவர்கள் தனியார்ப் பள்ளி மாணவர்கள் மட்டுமே. ஆனால், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்குப் பாடநூல்கள் இலவசமாகவே வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், இந்த விலையேற்றம் எல்லாம் பள்ளிப் பாடப் புத்தகங்களுக்குத்தான். கல்லூரிப் பாடநூல்களுக்கு அல்ல. எனவே, கல்லூரி மாணவர்கள் எந்த விதத்திலும் இந்த விலை உயர்வால் பாதிக்கப்பட மாட்டார்கள். அப்படி இருக்கும்போது, 'இந்த அரசு 'தமிழ்ப் புதல்வன்' திட்டத்துக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்துவிட்டு, இன்னொரு பக்கம் பாடப்புத்தகங்களின் விலையை உயர்த்துகிறது' என்கிற வாதம் அர்த்தமற்றது, அறிவுகெட்டத்தனமானது, அல்பத்தனமானது..!



**தமிழ்நாட்டில் உணவும் கொடுத்து, சிறந்த கல்வியையும் மாணவச் சமுதாயத்துக்குக் கொடுக்கிறது 'திராவிட மாடல் அரசு'.**

### செத்த மொழிக்கு டிஜிட்டல் உயிர்?





சமஸ்கிருதத்தை வளர்க்க, ஒன்றிய அரசு என்னென்னவோ செய்து பார்க்கிறது. இதர மொழிகளை விடவும், அதிக அளவில் நிதி எல்லாம் ஒதுக்குகிறது. எனினும் அதைக் கற்கவோ, கற்பிக்கவோ, அந்த மொழியில் உரையாடவோ யாரும் தயாராக இல்லை என்பதுதான் எதார்த்தமாக இருக்கிறது.

இந்நிலையில், ஆக்ஸிஸ் வங்கி புதுமையான முறையில் சமஸ்கிருதத்தைத் திணிக்க முயற்சிக்கிறது. அது சமீபத்தில் வெளியிட்டிருக்கும் விளம்பரம் ஒன்றில், 'சமஸ்கிருத மொழியில் பாஸ்வேர்டுகளை வைத்துக் கொண்டால், இணையம் மூலம் மேற்கொள்ளும் வங்கிச் சேவை பாதுகாப்பாக இருக்கும்' என்று கூப்பாடு போடுகிறது. இதில் என்ன அநியாயம் என்றால், அந்த விளம்பரத்தையும் சமஸ்கிருத மொழியிலேயே தயாரித்து வெளியிட்டிருக்கிறது.

மட்டுமல்ல. சமஸ்கிருத மொழியில் பாஸ்வேர்டுகளை உருவாக்கிக் கொள்ள, அதற்கென்று தனி இணையதளத்தையும் அந்த வங்கி ஏற்படுத்தியுள்ளது. இப்படி ஒரு யோசனை அந்த வங்கிக்கு வந்த காரணம், 'சமஸ்கிருத மொழி பலருக்கும் தெரியாத காரணத்தால், அந்த மொழியில் பாஸ்வேர்டுகளை வைத்துக்கொண்டால், இணையத் திருடர்கள் என்ன கைங்கர்யம் செய்தாலும், அந்த மொழியைப் புரிந்துகொண்டு உங்கள் வங்கிக் கணக்கில் கை வைக்க முடியாது' என்பதுதானாம்.

வளர்ந்து வருகிற 'செயற்கை நுண்ணறிவு' காலத்தில், செத்த மொழிக்கு உயிரூட்ட இப்படியெல்லாம் யோசிக்கிறார்களே என்று அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை என சமூக வலைதளங்களில் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

### :ப்ளாஷ்பேக்



#### தெருமுனை வரவேற்பு!



ஆர்.பி.எஸ்.கண்ணன்

1991-ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டம், வல்லம் நகர தி.மு.கழகம் சார்பில், தெருமுனைப் பிரச்சாரப் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்கள் கழக கொடியேற்றி உரையாற்றினார். அப்போது அவரை வரவேற்று சால்வை அணிவித்து சிறப்பு செய்தேன். அன்பில் பொய்யாமொழி, நாஞ்சில் சம்பத் ஆகியோர் உடனிருந்தனர்.

**– ஆர்.பி.எஸ்.கண்ணன்,**
**வல்லம் பேரூர் கழகம், தஞ்சாவூர் மத்திய மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்


#### ஈழத்தமிழர் நிதி!

1986-ஆம் ஆண்டு, ஜூன் இறுதியில் தமிழர்கள் மீது, சிங்கள ராணுவம் நிகழ்த்திய படுகொலைகளைக் கண்டித்து, தமிழ்நாடு முழுவதும் முழு அடைப்புப் போராட்டத்தை நடத்தியது கழகம். தனது பிறந்த நாள் விழாவை நடத்த வேண்டாம் என கேட்டுக் கொண்ட கலைஞர், ஈழத்தமிழர்களுக்கு உதவ, கலைவாணர் அரங்கில் அமர்ந்து நிதி திரட்டினார். அன்று திரட்டிய 2 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் நிதியை, பல்வேறு ஈழப்போராளிக் குழுக்களுக்குப் பகிர்ந்து அளிக்க, தி.மு.க. பொதுக்குழு முடிவு செய்தது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

574

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24-26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131